[1971 ஜூலை 17

Production of barrels by Indian Oil Corporation

* 290 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the Indian Oil Corporation is setting up any factory for the manufacture of barrels for packing up of oil in this State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்திய அரசுக்கு சொந்தமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் என்னும் நிறுவனத்திற்கு மணலியிலுள்ள பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் உற்பத்தியாகும் மசகு எண்ணெய், பிட்டுமென் இவற்றை நிரப்புவதற்குத் தேவையான 5 இலட்சம் ட்ரம்களும் 10 இலட்சம் பீப்பாய்களும் அதன் சொந்த உபயோகத்திற்கு என உற்பத்தி செய்வதற்கு உரிமம் வழங்கப்பட்டது. இத்திட்டம் ரூ. 25 இலட்சம் முதல் ரூ. 28 இலட்சம் வரை செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, எத்தனைபேருக்கு அதன்மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றிய விவரம் இல்லை.

திறந்த வெளி சிறைச்சாலை

* 291 வின.—திரு. என். கிட்டப்பா :

திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் திறந்த வெளி சிறைச்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாவட்டந்தோறும் திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் நன்னடத்தையோடு நடந்து கொள்பவர்களை பொதுப்பணித் துறையின் வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்வதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போது அந்தந்த சிறைச்சாலைகளில்தான் வேலை தரப்பட்டு வருகிறது. வேறு துறைக்கு வேலைக்கு அனுமதிப்பது குறித்து பரிசீலனையில் எதுவும் இல்லை.